திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த மாநிலத்திற்கும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த எங்களுக்கும், இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஏற்று, நல்ல பல செயல்களைச் செய்து தந்திடவேண்டும் என்று, இறைவன் அருளால் நீண்ட, நெடிய ஆயுளைப் பெற வேண்டும் என்று மனமார இந்த அவையின் சார்பாக வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்ற முறையிலே என்னுடைய வாழ்த்தையும், பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேருடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

91—

நியாய விலைக் கடை

***440—திரு. கோ. அரி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, சூரகாபுரம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள வயலூர் நியாய விலைக் கடையில், 491 குடும்ப அட்டைகள் உள்ளன. சூரகாபுரம் பகுதியில் 112 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தாய்க்கடைக்கும் மற்றும் உத்தேச பகுதி நேரக் கடைக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மேற்படி பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்டால், பகுதி நேரக்

கடையில் 200 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாகவும், தாய்க்கடையில் 349 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, சூரகாபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை ஆரம்பிக்க சிறப்புக் காரணங்கள் ஏதாவது இருந்தாலொழிய, அதுகுறித்து நடவடிக்கை எடுக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்திலே, சூரகாபுரம் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் ஏழை, எளியவர்கள் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று அந்த ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய ஓர் இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் சரியாக இல்லை என்பதால், உடனடியாக சிறப்புக் கவனம் இதிலே செலுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய குறையைத் தீர்க்கின்ற வகையிலே, அந்த சூரகாபுரம் பகுதியிலே உடனடியாக பகுதி நேர நியாய விலைக் கடையைத் தொடங்க, இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவது ரேஷன் கார்டுகளுக்கு அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்குவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் கடைகளின் தூரம் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் வரை இருப்பதை அறிந்து, அதற்குரிய வகையில் இந்தக் கடைகளை அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, அதை 1½ கிலோ மீட்டராக மாற்றலாமா என்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே அனுமதி பெற்று வைத்திருக்கிறோம். அதற்கான உத்தரவுகள் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த உத்தரவுகள் இன்னும் வழங்கப்படாததற்கான காரணம், அதுபற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அந்த உத்தரவு வழங்கியதற்குப் பிறகு வேண்டுமானால், அதற்கான தளவாடங்கள், இருக்க இடம், கடை நடத்துவதற்கான இடம் இவற்றைத் தந்து உதவினால் அந்தப் பகுதி நேரக் கடை திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்களுடைய முயற்சியால் அங்கே தளவாடங்கள், மற்ற பொருட்கள் எல்லாம் வழங்கப்பட்டு, ஓரிரு நாட்கள் திறந்து மூடப்பட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, அதை உடனடியாக திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதைப்போல அதற்கான சிறப்புக் காரணங்கள் ஏதாவது இருக்குமானால், உறுப்பினர் அதற்கான இடவசதிகளோடு செய்து கொடுப்பாரேயானால் அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் 500 கார்டுகள் அவசியம் இருக்கவேண்டும் என்ற உத்தரவு இருக்கின்ற காரணத்தால், நீண்டதூரம் உள்ள கிராமங்களுக்குக்கூட பகுதி நேரக் கடைகள் பிரித்துக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிபந்தனையைத் தளர்த்தி, பகுதி நேரக் கடைகள் திறக்க ஆவன செய்தால்தான் பல கிராமங்களிலே நீண்டதூரம் சென்று உணவுப் பொருள் வாங்கக்கூடிய நிலை மாறும். அதற்கு இந்த அரசு உத்தரவு வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதி பெற்றிருக்கிறோம். அதற்கான விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் நிச்சயமாக அவற்றைப் பிரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையொட்டிய ஒரு கேள்வி. சில பேர் ஆய்வு முடிந்து,

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY 600 009 வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 25]

குடும்ப அட்டைகள் கிடைக்கும் என்று அவர்கள் கருதிக்கொண்டு இருக்கிறபோது, வட்டாட்சியர் அவர்களிடத்திலே கேட்கிற நேரத்தில், 'குடும்ப அட்டைகளை சென்னையிலே அச்சடித்துத்தான் இங்கே வர வேண்டியிருக்கிறது. அது கிடைத்தவுடன் அனைவருக்கும் வழங்கப்படும்' என்று வட்டாட்சியர்கள் கூறுகிறார்கள். அது எப்போது வழங்கப்படும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது நியாய விலைக் கடை சம்பந்தப்பட்ட கேள்வி.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியிலே, இப்படி அதிகமான கார்டுகளுக்கான மனுக்கள் எல்லாம் பெற்று, கிட்டத்தட்ட 35 இலட்சம் மனுக்கள் இங்கே எழிலகத்திற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில், ஆணையரிடத்திலே வந்தன. தேர்தல் வந்த காரணத்தினால் அவை எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டன. இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அது சம்பந்தப்பட்ட மனுக்களைத் திரும்ப அனுப்பி, மாவட்ட நிர்வாகம் இன்றைக்கு சோதித்து, original card, அதாவது உண்மையானவர்களைக் கண்டறிந்து, கார்டு வழங்குகின்ற அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் அவர்களுக்குக் கட்டாயம் கார்டு வந்து சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

92—

TRUTH ALONE TRIUMPHS

புதிய கட்டடம்

***1597—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கேதுநாயக்கன்பட்டிபுதூர் பகுதியிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?